**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, KARAIKUDI.**
**C.C. No. 33/2021 PW.12**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ரெங்கநாதகுப்தா | த–பெ | சுந்தரம் செட்டியார் |
| ஊர்: | : | கோயம்புத்தூர் | சமயம்: | |
| வயது: | : | 66/2024 | வட்டம்: | |
| தொழில்: | : | வேலை எதுவும் செய்யவில்லை. | மாவட்டம் | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 17.12.2024**

**A1 ஆஜர் இல்லை. 355 BNSS படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. A2 ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------------

17.12.2024

முதல் விசாரணை :

**(Video Call மூலம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது)**

1) நான் தற்போது கோயம்புத்தூரில் வசித்து வருகிறேன். வேலை எதுவும் செய்யவில்லை. 2007 ம் வருடம் கோயம்புத்தூரில் நகை கடை வைத்து தொழில் செய்து வந்தேன். இந்த வழக்கில் திருமூர்த்தி என்பவரை எனக்கு தெரியாது. வழக்கு குறித்து எனக்கு எதுவும் தெரியாது. 2007 ல் போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். மற்றபடி வழக்கு குறித்து தற்போது எனக்கு எதுவும் நினைவில்லை. போலீசார் கேட்டுக்கொண்தற்கிணங்க விசாரணைக்கு ஒத்துழைத்தேன். நான் கடை நடத்தும்போது தங்கம் மற்றும் வெள்ளி நகை சாமான்களை எனது கடைக்கு வந்து கொடுத்து யார் பணம் பெற்றுகொண்டார்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது.

**( அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை)**

**குறுக்கு விசாரணை**

1) போலீசாரின் விசாரணையில் வழக்கின் 2ம் எதிரியான திருமூர்த்தி என்பவரை தனக்கு தெரியும் என்றும், 08.09.2007, 25.09.2007, 26.12.2006, 16.08.2007 ஆகிய சமயங்களில் திருமூர்த்தி தனது கடைக்கு வந்து தங்கம் மற்றும் வெள்ளி பொருட்களை தன்னிடம் கொடுத்து அதற்கு பதிலாக சுமார் 12 ஆயிரம், ரூ. 3,200/– , ரூ.2800/–,

ரூ.5,300/—ரூபாய் ஆகியவற்றை மேற்சொன்ன தவணைகளில் குற்ற வழக்குகளில் தொடர்புடைய தங்கம் மற்றும் வெள்ளி சாமான்களை வைத்து பெற்றுக்கொண்டதாகவும் இது தொடர்பாக குற்றப்பிரிவு போலீசார் 08.09.2007 அன்று காலை 10.00 மணிக்கு சம்பவ இடம் வந்து மேற்சொன்ன வழக்கு சொத்துக்களை அத்தாட்சியில் கைப்பற்றும்பொழுது தான் உடனிருந்ததாகவும், தன்னிடமிருந்து போலிசார் மேற்படி வழக்கு சொத்துக்களை சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றிய போது விசாரணைக்கு ஒத்துழைத்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பிறழ்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

( ஒப்பம். செல்வி. செ.ஜெயப்பிரதா , B.Sc., B.L., (Hon's)
விரைவுநீதிபதி, காரைக்குடி.